**CC.No.175/2026 (JM.No.II, DHARMAPURI)**

**12.06.2026**

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது. (எதிரி ஆஜர் இல்லை)**

**PW–1 : திரு.பிரதீப், தலைமை காவலர்**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது தொப்பூர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 04.09.2025 வருடம் 16.00 மணிக்கு தருமபுரி மதுவிலக்கு அமல் பிரிவில் பணியில் இருந்தபோது காவல் உதவி ஆய்வாளர் பிரபாகரன் அவர்களுக்கு கிடைத்த இரகசிய தகவலின்பேரில் நான் மற்றும் தலைமை காவலர் சுரேஷ்குமார் ஆகியோர்கள் மது விலக்கு வழக்குகள் சம்பந்தமாக ரோந்து பணியில் இருந்த போது எங்களுக்கு கிடைத்த தகவலின் பேரில் தொப்பூர், சின்னதாதன்கொட்டாய் கிராமத்தில் உள்ள எதிரியின் வீட்டின் பின்புறம் இவ்வழக்கின் எதிரி சேட்டு கையில் ஒரு பையுடன் ஏதோ வைத்து கொண்டிருந்தார். எங்களை பார்த்து தப்பித்து ஓட முயற்சித்தார். அவரை பிடித்து விசாரித்தபோது 180ml அளவு கொண்ட day night brandy –27 அரசு மது பாட்டிகளை அரசின் அனுமதி இல்லாமல் சட்ட விரோதமாக சில்லரை விற்பனை செய்ய வைத்திருந்த பாட்டில்களை நான் மற்றும் தலைமை காவலர் சுரேஷ்குமார் இருவரும் பாட்டில்களை காவல் உதவி ஆய்வாளர் பிரபாகரன் அவர்களிடம் ஒப்படைத்தோம். பின்பு எதிரியை கைது செய்து நான் மற்றும் தலைமை காவலர் சுரேஷ்குமார் முன்னிலையில் 16.30 மணிக்கு கைப்பற்றுதல் மகஜருடன் கூடிய அழித்தல் மகஜர் தயார் செய்தோம். அந்த கைப்பற்றுதல் மகஜரில் அதில் சாட்சியாக இருந்து நானும், தலைமை காவலர் சுரேஷ்குமார் என்பவரும் கையெழுத்திட்டோம். இது சம்பந்தமாக காவல் உதவி ஆய்வாளர் பிரபாகரன் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். கைப்பற்றுதல் மகஜருடன் கூடிய அழித்தல் மகஜர் **<u>அ.த.சா.ஆ.1</u>** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

சம்பவ இடத்திற்கு நானும், தலைமை காவலர் சுரேஷ்குமார் ஆகியோர்கள் இருசக்கர வாகனத்தில் மதியம் 04.00 மணிக்கு சென்றோம். எதிரியின் வீடு ஓட்டு வீடா, மெத்த வீடா என்றால் சீட்டுவீடு. மேற்படி நேரத்தில் மதுபான கடையில் மதுபானம் கிடைக்கும் என்றால் சரிதான். மதுபானங்களை கைப்பற்றிய போது சில பாட்டில்கள் திறந்த நிலையில் இருந்தது. மேற்படி பாட்டில்கள் திறந்து இருந்ததை என்னுடைய வாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் சரிதான். எந்த பையில் எதிரி மதுபானங்களை வைத்திருந்தார்கள் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். மதுபானங்களை அதே இடத்தில் கொட்டி அழித்து அழித்தல் மகஜர் தயார் செய்தோம். மதுபான பாட்டில்களை திறந்து அங்கேயே கொட்டி, பாட்டில்களை உடைத்து அழித்தோம். கைப்பற்றப்பட்டதாக கூறப்படும் மதுபாட்டில்களின் புகைப்படம் எதையும் நாங்கள் எடுக்கவில்லை என்றால் சரிதான். காவல் துறை ஆய்வாளர் அவர்களின் உத்தரவின்பேரில் அழித்தோம். இரசாயன பரிசோதனைக்கு மதுபானத்தை உட்படுத்தவில்லை என்றால் சரிதான். எதிரியின் வீடு எந்த இடத்தில் உள்ளது என்று பார்வை மகஜர் தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். காவல் நிலையத்தில் வைத்து மகஜர் தயார் செய்தோம். நான் சம்பவ இடத்திற்கு

செல்லவில்லை என்றாலும், ஆவணங்கள் அனைத்து காவல் நிலையத்தில் வைத்து தயாரித்தோம் என்றாலும், அதனால் தான் புகைபடங்கள் எடுத்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்போம் என்றாலும், புள்ளி விவரத்திற்காக பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

SUSHMITHA RAJAMANICKAM

Digitally signed by SUSHMITHA RAJAMANICKAM
Date: 2026.06.12 16:33:19 +0530